மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 02 செவ்வாய்க்கிழமை 15.04.2025 கதிர் 167

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு - யாழ் முற்றம் Yarl Muttram Youtube Channel



# பிள்ளையானுடன் பேச ரணிலுக்கு அனுமதி மறுப்பு; அவரை நேரில் பார்வையிட கம்மன்பிலவுக்கு அனுமதி





கொழும்பு, ஏப். 15

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனுடன் உரையாடுவதற்கு வாய்ப்பளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 7➤

## நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்கள் தொடர்பாக

# நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்களை மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டுகோள்!




கொழும்பு, ஏப். 15

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் அந்த மனுக்கள் மற்றும் வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகளைக் குறித்த மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட சில வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன.

இதற்கு எதிராகப் பல கட்சிகள் நீதிமன்றத்தில் நீதி கோரி வழக்குத் தாக்கல் செய்திருந்தன. 7➤

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் சாரதி சென்ற வாகனம் கோர விபத்து!


### அவரும் மனைவியும் பலி; இரு குழந்தைகளும் காயம்



கொழும்பு, ஏப். 15

அனுராதபுரம் – குருநாகல் வீதியில் இடம்பெற்ற கோர விபத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் சாரதி 7➤

## திருமலையில் யானை மீது மோட்டார் சைக்கிள் மோதி இளைஞர் ஒருவர் மரணம்



திருகோணமலை, ஏப். 15

திருகோணமலை – ஹொரவப் பொத்தானை பிரதான வீதியில் கன்னியா பகுதியில் யானை மீது மோதி மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவரின் நண்பன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று 7➤

## மட்டக்களப்பில் கடலில் தவறி வீழ்ந்து காணாமல்போன மீனவர் சடலமாக மீட்பு!



மட்டக்களப்பு, ஏப். 15

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலமுனை நடுத்துறை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது தவறி வீழ்ந்து காணாமல்போன மீனவர் ஒருவர் இன்று செவ்வாய்க்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பாலமுனையைச் சேர்ந்த 59 வயதுடைய மீனவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 7➤

## வீதியோரத்தில் உரையாடிக்கொண்டிருந்த நபர் மோட்டார் சைக்கிள் மோதி பரிதாப உயிரிழப்பு!




யாழ்ப்பாணம், ஏப். 15

யாழ்ப்பாணத்தில் வீதியோரமாக நின்று நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்த நிலையில் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடியைச் சேர்ந்த 7➤

# மூன்று நாட்களில் ரூ. 134 மில்லியன் வருவாய்



கொழும்பு, ஏப் 08

புத்தாண்டு பருவ காலத்துடன் இணைந்து, கடந்த மூன்று நாட்களில் அதிவேக நெடுஞ்சாலை வலையமைப்பு ரூ. 134 மில்லியன்வருவாயை ஈட்டியுள்ளது என்று அதிவேக நெடுஞ்சாலை பராமரிப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் 11, 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் மொத்தம் 387,000 வாகனங்கள் அதிவேக நெடுஞ்சாலையைப் பயன்படுத்தியதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் தொகையில், முதல் இரண்டு நாட்களில் (ஏப்ரல் 11 மற்றும் 12) 297,736 வாகனங்களிலிருந்து ரூ. 100 மில்லியனுக்கும் அதிகமாக வசூலிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார். (ஐ)

# முன்னாள் சிறை அதிகாரி சுட்டுக்கொலை: வசமாகச் சிக்கிய பிரதான துப்பாக்கிதாரி

கொழும்பு, ஏப். 15

பூஸா சிறைச்சாலையின் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி தாய்லாந்துக்குத் தப்பிச் செல்ல முயன்றபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இன்று செவ்வாய்க்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அம்பல ாங்கொடை, குளிவத்த பிரதேசத்தில் வசிக்கும் விஜேமுனி லலன்த பிரிதிராஜ் குமார என்பவர் ஆவார்.

சந்தேகநபர் இன்று காலை 7.50 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தை நோக்கி செல்வதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர் கொண்டு வந்த கடவுச்சீட்டு போலியானது எனத் தெரியவந்துள்ளது.

பின்னர் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் அவர் பாதாள உலகக் கும்பலின் தலைவரான "கரந்தெனிய சுத்தா" என்பவரின் பிரதான துப்பாக்கிதாரி ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபர் குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.



# அதிகமாக தண்ணீர் பருகுமாறு அறிவுறுத்தல்

கொழும்பு, ஏப் 15

இந்த நாட்களில் நாட்டின் பல பகுதிகளில் அதிக வெப்பம் நிலவும் என்பதால், கவனம் செலுத்துமாறும் அதிகளவில் தண்ணீரை பருகுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொள்கிறது.

குறிப்பாக வடக்கு, வடமத்திய, வடமேற்கு, கிழக்கு, ஊவா மாகாணங்களிலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் சில பகுதிகளிலும் இந்த உயர் வெப்பநிலை அதிகமாக இருப்பதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

மனித உடலை நீண்ட நேரம் வெப்பத்தில் வெளிப்படுத்துவது நீரிழப்பு, தசைச் சிதைவு, அதிகப்படியான சோர்வு மற்றும் பக்கவாதத்திற்கு வழிவகுக்கும் என்றும், வயதானவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்கள் இது குறித்து மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்றும் துறை அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதுபோன்ற கடுமையான வெப்பநிலை தொடர்ந்தால், பொதுமக்கள் அதிக அளவு தண்ணீர் குடிக்கவும், கடுமையான செயல்பாடுகளை குறைக்கவும், நிழலான பகுதிகளில் தங்கவும் திணைக்களம் அறிவுறுத்துகிறது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# ஓரங்கட்டப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதிகளின் திடீர் சந்திப்பு



கொழும்பு, ஏப் 15

மக்களின் கடும் எதிர்ப்பினால் அரசியல் மட்டத்தில் தற்காலிக ஓய்வினை பெற்றுள்ள முன்னாள் ஜனாதிபதிகளான ராஜபக்சர்கள் நேற்றையதினம் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டுள்ளனர்.

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு வாழ்த்து தெரிவிக்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச அவரது சகோதரரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்சவை சந்திப்பதற்காக சென்றுள்ளார்.

இந்த சந்திப்பு விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இடம்பெற்றதாக மகிந்தவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த சந்திப்பு தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை பதிவிட்டுள்ளார்.

அதில், "எனது சகோதரர், முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ச மற்றும் அவரது மனைவி அயோமா ராஜபக்ச ஆகியோர் எனது உத்தியோகபூர்வ இல்லத்தில் என்னைச் சந்திக்க வந்தனர், நாங்கள் மிகவும் அன்பான உரையாடலை மேற்கொண்டோம்.

புத்தாண்டு தினத்தன்று அவர்கள் கைகளில் வெற்றிலையுடன் வருவதைப் பார்த்தபோது, பக்மாவில் உறவினர்களை பார்க்க செல்லும் சம்பிரதாயமே எனக்கு நினைவுக்கு வந்தது. அவர்கள் இருவருக்கும் வளமான மற்றும் ஆரோக்கியமான புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்வில் பல நண்பர்களும் கலந்து கொண்டனர், அவர்களுக்கு வளமான மற்றும் ஆரோக்கியமான புத்தாண்டு வாழ்த்துக்கள்" என அவர் பதிவிட்டுள்ளார் (ஐ)

# எஜமான்களை சிக்க வைக்கும் பிள்ளையான்

கொழும்பு, ஏப் 15

தடுப்புக் காவலில் தடுத்து வைக கப்படடுள்ள, முன்னாள் ராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திர காந்தன் எனப்படும் பிள்ளையான் தனது முன்னைய எஜமான்களை (முன்னாள் எம்.பிக்கள்) சிக்க வைக்கும் வாக்குமூலங்களை வழங்கியுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

முன்னாள் அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேச துரை சந்திரகாந்தன் கைதாகி மூன்று மாதங்களிற்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

எனினும் பிள்ளையான் தனது முன்னைய எஜமான்களை சிக்க வைக்கும் வாக்குமூலங்களை வழங்கியுள்ளதாக அனுர அரசு ஆதரவு ஊடகங்கள் பரபரப்பினை வெளிப்படுத்தியுள்ளன.

மேலும், யாழில் மகேஸ்வரி நிதியத்தின் ஊழல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஒருவர் கைதாகலாமென்ற ஊகம் வெளிபபடுத்தப்பட்டுள்ளது. 1996ம் ஆண்டு முதல் வடமராட்சி கிழக்கின் கரையோர கிராமங்களை இலக்கு வைத்து பாரிய மணல் கொள்ளை மகேஸ்வரி நிதியத்தின் பேரில் முன்னெடுக்க ப்பட்டிருந்ததாக குற்றம் சுமத் தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நல்லாட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட ஊழல் ஒழிப்பு துறைக்கு தற்போதைய ஜனாதிபதி நியமிக்கப்பட்டிருந்தார்.

தற்போது அவர் ஜனாதிபதி கதிரையில் அமர்ந்துள்ள நிலையில் மகேஸ்வரி நிதியத்தின் ஊழல் தொடர்பில் முன்னாள் அமைச்சர் கைதாகலாம் என .ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ)

# தமிழ் இனப்படுகொலை உண்மைகளை மூழ்கடிக்கும் அரசாங்கம் : கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப் 15

தமிழ் மக்கள் படுகொலைகளை விசாரிக்க விரும்பாத அரசாங்கம் செம்மணி மனிதப் புதைகுழியை தோண்டுவதில் தயக்கம் காட்டுவதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கை இராணுவத்தினரால் சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சுமார் 600இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் யாழ் செம்மணியில் புதைக்கப்பட்டமை ஆதார பூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு இடம்பெற்ற காலப்பகுதியில் குறித்த பகுதி மறைக்கப்பட்டு இரவு இரவாக கனகர வாகனங்கள் மூலம் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட நிலையில் அதனை மூடி மறைப்பதற்கும் ஆதாரங்களை அழிப்பதற்கும் பல்வேறு முயற்சிகள் அப்போதைய அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அதேபோன்று தற்போதைய ஜேவிபி என்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மையில் செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அதனை அகழ்வதற்கு அனுமதி வழங்காது இழுத்தடிப்பு செய்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை பொறுத்தவரையில் மனிதப் புதைகுழி ஒன்றை அகழ்வதற்கு 20 இலட்சம் ரூபாய் என்பது சிறிய தொகை அதனை வழங்குவதற்கு கூட தற்போதைய அரசாங்கம் அக்கறை செலுத்தாது இழுத்தடிப்பு செய்கிறது.

குறித்த மனித புதைகுழியை தமிழ் பேராசிரியர் ஒருவர் ஆய்வு செய்வதற்காக அமர்த்தப்பட்ட நிலையில் அவரைக் கூட தற்போதைய அரசாங்கம் மாற்றுவதறகான காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருவதாக அறிய கிடைத்துள்ளது.

தற்போதைய தேசிய மக்கள் சக்தி என்கின்ற ஜேவிபியினர் தொடர்பில் தமிழ் மக்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். இறுதி யுத்த காலத்தில் போர் நிறுத் தத்தை விரும்பாத இராணுவத்திற்கு ஆட்களை திரட்டி தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலைகளை மேற் கொண்டவர்கள். பெயரை மாற்றிக் கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வை தரப் போகிறோம் என மக்களை ஏமாற்றி தமது சிங்கள ஏகாபத்திய நிகழ்ச்சி நிரல்களை அரங்கேற்றிய வண்ணம் உள்ளனர்.

இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பிலும் சர்வதேச விசாரணைகளை மூடி மறைக்கும் செயற்பாடுகளில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. தேசிய மக்கள் சக்தியினர் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் என்பதற்கு தற்போது பட்டலந்த விவகாரம் மிக சரியான உதாரணமாகும். அதாவது தேசிய மக்கள் சக்தி அரசாங் கத்தின் இரட்டை வேடத்தை தமிழ் மக்கள் அறிந்த விவகாரமாக பட்டலந்த விவகாரத்தை கொள்ளலாம். பட்டலந்த வீட்டு திட்ட குடியிருப் பில் சித்தரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தமது தோழர்கள் தொடர்பான விசாரணைகளுக்கு சர்வதேச தரப்புக்களை இணைத்து மேற்கொள்வதற்கு தயார் என கூறுகிறார்கள். இந்நிலையில், ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஆறு மாதங்கள் கடந்து செல்கின்ற நிலையில் ஜேவிபி என்கின்ற தேசிய மக்கள் சக்தி தொடர்பில் தமிழ் மக்கள் உணர ஆரம்பித்து விட்டார்கள்.

ஆகவே தமிழ் மக்களை தத்துவார்த்த ரீதியாக அழிப்பதற்கு பல்வேறு செயற்திட்டங்களை வகுத்துக்கொடுத்த தற்போதைய தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் விரட்டியடிப்பதற்கான காலம் கனிந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கையர்களுக்கு ஏற்படவுள்ள நெருக்கடி



கொழும்பு, ஏப் 15

இலங்கை மீது அமெரிக்கா மீண்டும் இடைநிறுத்தப்பட்ட வரியை விதித்தால், அது நாட்டின் ஆடைத் துறையில் பணிபுரியும் சுமார் அரை மில்லியன் பணியாளர்களை பாதிக்கும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் பேராசிரியர் சுரங்க சில்வா தெரிவித்துள்ளார். குறித்த பணியாளர்கள் வேலை இழந்தால், சமூக வளர்ச்சியும் பாதிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

44 சதவீத வரி என்பது மிக அதிகமாக உணரக்கூடிய வரியாக காணப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் இருந்து அதிகளவில் ஆடைகள் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அவை மிகவும் தரம் வாய்ந்த ஆடைகளாகும். இதனால் இலங்கையின் ஆடை தொழிற்துறைக்கு கடுமையான பாதிப்பு ஏற்படும் என குறிப்பிடப்படுகின்றது.

கடன் செலுத்தி வரும் இலங்கைக்கு இது பொருளாதாரத்தின் மிகப்பெரிய தாக்குதலாக காணப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

# அமைச்சர்கள் 3 பேர் மீது அ.தி.மு.க., நம்பிக்கையில்லா தீர்மானம் அனுமதி மறுப்பு




அமைச்சர்கள் செந்தில்பாலாஜி, கே.என்.நேரு மற்றும் பொன்முடிக்கு எதிராக அ.தி.மு.க., நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர அ.தி.மு.க., சார்பில் சபாநாயகர் அப்பாவுக்கு கடிதம் எழுதப்பட்டு உள்ளது. "நாங்கள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மீது அவையில் விவாதம் நடத்த சபாநாயகர் அனுமதி மறுத்துவிட்டார்" என அ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் குற்றம் சாட்டி உள்ளார்.

டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக அமைச்சர் செந்தில் பாலாஜி மீதும், பெண்களை இழிவாக பேசிய அமைச்சர் பொன்முடி மீதும், நகராட்சி நிர்வாகத் துறை முறைகேடு தொடர்பாக அமைச்சர் கே.என் நேரு மீதும் நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர அ.தி.மு.க., முடிவு செய்துள்ளது.

இது குறித்து முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் நிருபர்கள் சந்திப்பில் கூறியதாவது: அவையில் உள்ள அமைச்சர்கள் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர சபாநாயகர் அப்பாவு இடம் முறையிட்டோம். கே.என். நேரு, செந்தில் பாலாஜி, பொன்முடி ஆகியோர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர அனுமதி மறுக்கப்பட்டது.

அதனால் வெளிநடப்பு செய்துள்ளோம். கோபத்தில் இருக்கும் தமிழக மக்களை மடைமாற்றம் செய்யவே மாநில சுயாட்சி குறித்து முதல்வர் ஸ்டாலின் பேசியிருக்கிறார். இது முழுவதும் ஏமாற்று வேலை. அ.தி.மு.க.,வினரை தொடர்ந்து புறக்கணிப்பதிலேயே சபாநாயகர் நேரத்தை செலவிடுகிறார். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## ஆம்ஸ்ட்ராங் மனைவி பொற்கொடியின் கட்சி பதவி பறிப்பு பகுஜன் சமாஜ் கட்சி அறிவிப்பு



பகுஜன் சமாஜ் கட்சி மாநில ஒருங்கிணைப்பாளர் பதவியிலிருந்து ஆம்ஸ்ட்ராங் மனைவி பொற்கொடி விடுவிக்கப்பட்டார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக தலைவராக இருந்தவர் ஆம்ஸ்ட்ராங், 52. சென்னை பெரம்பூரில், கடந்தாண்டு கொலை செய்யப்பட்டார். இவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து ஆம்ஸ்ட்ராங் மனைவி பொற்கொடிக்கு தமிழக பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் பதவி வழங்கப்பட்டது. கட்சியின் மாநில தலைவராக ஆனந்தன் நியமிக்கப்பட்டார்.

கடந்த வாரம் பகுஜன் சமாஜ் கட்சியின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அந்த கூட்டத்தின் போது, பகுஜன் சமாஜ் கட்சியின் மேலிடப் பிரதிநிதிகளை, பொற்கொடி 500க்கும் மேற்பட்ட பகுஜன் சமாஜ் கட்சியினர் ஒன்று திரண்டு நேரில் சந்தித்து பேசினார்.

அப்போது, மாநில தலைவராக உள்ள ஆனந்தன், காழ்ப்புணர்சசியுடன் செயல்படுவதாக மேலிட பிரதிநிதிகளிடம் பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் ஆவேசமாக புகார் தெரிவித்தார். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் தற்போது, ஒருங்கிணைப்பாளர் பதவியிலிருந்து ஆம்ஸ்ட்ராங் மனைவி பொற்கொடி விடுவிக்கப்பட்டார். தமிழக மாநில தலைவர் ஆனந்தன் தலைமையில் தொண்டர்கள் செயல்பட வேண்டும் எனறு கட்சித் தலைமை அறிக்கை வெளியிட்டுள்ளது. (ஐ)

## பள்ளியில் சக மாணவருக்கு அரிவாள் வெட்டு தமிழகம் எங்கே போகிறது

### அன்புமணி வேதனை



சக மாணவரை அரிவாளால் வெட்டிய 8ம் வகுப்பு மாணவர் சம்பவத்தை குறிப்பிட்டு, தமிழகம் எங்கே போகிறது என்று பா.ம.க., தலைவர் அன்புமணி வேதனை தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்து வந்த மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட சண்டையில், ஒரு மாணவரை இன்னொரு மாணவர் அரிவாளால் வெட்டியிருப்பதும், அதைத் தடுக்கச் சென்ற ஆசிரியருக்கு லேசான காயம் ஏற்பட்டிருப்பதும் அதிர்ச்சி அளிக்கிறது. கல்வியும், ஒழுக்கமும் கற்பிக்கப்பட வேண்டிய பள்ளியில் இத்தகைய நிகழ்வுகள் நடப்பது நல்லதல்ல.

இரு மாணவர்களுக்கும் இடையே பென்சில் வாங்குவதில் தான் மோதல் ஏற்பட்டிருக்கிறது. இது மறந்து, கடந்து போக வேண்டிய மோதல் தான். ஆனால், அதற்காக அரிவாளை வீட்டில் இருந்து பையில் மறைத்து எடுத்து வந்து சக மாணவரை வெட்டும் அளவுக்கு ஒரு மாணவரின் மனநிலை வெறுப்படைந்திருக்கிறது என்றால், அது மாணவர்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சமுதாயத்திலும் அதிகரித்து வரும் சீரழிவையே காட்டுகிறது. இந்தப் போக்கு சரி செய்யப்பட வேண்டும்.

தமிழகத்தில், குறிப்பாக தென் மாவட்டங்களில் பல்வேறு காரணங்களால் மாணவர்கள் சக மாணவர்களால் தாக்கப்படுவது அதிகரித்து வருகிறது.

நாங்குநேரியில் கடந்த 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ம் வகுப்பு மாணவர் சின்னத்துரை வீடு புகுந்து வெட்டப்பட்டது, தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டத்தில் பஸ்சை மறித்து அதில் பயணம் செய்த மாணவர் வெட்டப்பட்டது என வன்முறை நிகழ்வுகள் தொடர்கின்றன. இத்தகைய நிகழ்வுகளை பார்க்கும் போது தமிழகம் எங்கே செல்கிறது? என்ற கவலை தான் ஏற்படுகிறது.

மாணவர்கள் தான் நாட்டின் எதிர்காலத் தூண்கள். அவர்களுக்கு நல்வழி காட்டுவது தான் பள்ளிகள் மற்றும் சமூகத்தின் கடமை ஆகும். இதை மனதில் கொண்டு பள்ளிகளில் நீதிபோதனை பாடவேளைகளை மீண்டும் அறிமுகம் செய்ய வேண்டும் விளையாட்டுப் பாடவேளையை அதிகரிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)

## மே.வங்கத்தில் நிலவும் வன்முறை மக்கள் அமைதி காக்கும்படி மம்தா வேண்டுகோள்

"மக்கள் அமைதியைப் பேண வேண்டும். வன்முறையைத் தூண்டுவதற்கு மதத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்" என மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி வேண்டுகோள் விடுத்தார்.

மேற்கு வங்கத்தில் வக்ப் சட்டத்துக்கு எதிராக போராட்டங்கள் நடந்து வருகின்றன. முர்ஷிதாபாதில் நடைபெற்ற போராட்டம் வன்முறையில் முடிந்தது. இதில் 3 பேர் கொல்லப்பட, போலீசார் வாகனங்களுக்கும் தீ வைக்கப்பட்டது.

மேற்கு வங்க கலவரத்தில் 150 பேர் கைது வீடுகளை விட்டு வெளியேறும் ஹிந்துக்கள்

வன்முறைக்கு மத்தியில், மக்கள் அமைதியைப் பேண வேண்டும். வன்முறையைத் தூண்டுவதற்கு மதத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என மம்தா பானர்ஜி வேண்டுகோள் விடுத்தார். இது குறித்து, மம்தா பானர்ஜி கூறியதாவது: தர்மம் என்பது பக்தி, பாசம், மனிதநேயம், அமைதி, நட்பு, கலாச்சாரம், நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றைக் குறிக்கிறது.

நாம் தனியாகப் பிறக்கிறோம், தனியாகவே இறக்கிறோம் பிறகு ஏன் சண்டையிட வேண்டும்? ஏன் கலவரங்கள், போர் அல்லது அமைதியின்மை? அனுமதியுடன் அமைதியான போராட்டங்களை நடத்த அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், யாராக இருந்தாலும் சரி, சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ள வேண்டாம்.

யாராவது உங்களைத் தூண்டிவிட முயற்சிக்கும்போது, வலையில் சிக்க வேண்டாம். வக்ப் திருத்தச் சட்டம் மத்திய அரசால் உருவாக்கப்பட்டது. எனவே நீங்கள் விரும்பும் பதிலை மத்திய அரசிடமிருந்து பெற வேண்டும். இந்த விஷயத்தில் எங்கள் நிலைப்பாட்டை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம். இந்த சட்டத்தை நாங்கள் ஆதரிக்கவில்லை. இந்த சட்டம் மாநிலத்தில் செயல்படுத்தப்படாது. அப்படியானால் கலவரம் எதற்காக நடக்கிறது. இவ்வாறு மம்தா பானர்ஜி கூறினார்.(ஐ)





2018 ஆம் ஆண்டு முதன் முதலில் உலகின் முன்னணி மின்னனு வர்த் தக நிறு வனம்,வேலைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பணியை மனித தலையீடு இல்லாமல் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் நிகழ்த்தியது. அந்த செயலி பெரும்பாலும் பெண்களின் விண் ணப்பங்களை எல்லாம் முதல் கட்ட த்திலேயே நிராகரித்தது. அதிக அளவில் ஆண்களின் விண்ணப்பங்களை மட்டுமே தேர்வு செய்தது. இது குறித்துப் புகார்கள் வந்ததால், நிறுவனம் ஆராயத் தொடங்கியது.

# புதிய தொழில்நுட்பம்

# பழைய பாலினப் பாகுபாடு!

'செயற்கை நுண்ணறிவு' இன்று அசுரவேகத்தில் வளர்ந்து வரும் ஒரு தொழில்நுட்பம். எதிர்காலத்தில் அனைத்து துறைகளிலும் கோலோச்சப் போகும் தொழில்நுட்பம் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. ஆனால், பொதுவெளியில் காணப்படும் பாலின சமத்துவமின்மை இது போன்ற தொழில்நுட்பத்திலும் காணப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு முதன் முதலில் உலகின் முன்னணி மின்னணு வர்த்தக நிறுவனம்,வேலைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் பணியை மனித தலையீடு இல்லாமல் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் நிகழ்த்தியது. அந்த செயலி பெரும்பாலும் பெண்களின் விண்ணப்பங்களை எல்லாம் முதல் கட்டத்திலேயே நிராகரித்தது. அதிக அளவில் ஆண்களின் விண்ணப்பங்களை மட்டுமே தேர்வு செய்தது. இது குறித்துப் புகார்கள் வந்ததால், நிறுவனம் ஆராயத் தொடங்கியது.

பிரச்சினைக்கான காரணம், அந்த நிறுவனம் செயலிக்கு கடைசி பத்து வருடங்களின் தரவுகளை உள்ளீடு செய்திருந்தது. அந்தத் தரவுகள் பெரும்பாலும் ஆண்களிடம் இருந்து பெறப்பட்ட தரவுகள். அதனால் அந்த செயலி தானாக பெண் என்ற சொல் இடம் பெறும் விண்ணப்பங்களை எல்லாம் நிராகரித்தது. இதன் பிறகு அந்த செயலி தடை செய்யப்பட்டது.


2019ஆம் ஆண்டு ஆப்பிள் நிறுவனம் 'ஏஐ தொழில்நுட்பத்துடன் கூடிய கடன் அட்டை' ஒன்றை உருவாக்கியது. இந்தக் கடன் அட்டை, ஆண்களைவிட பெண்களுக்கு மிகவும் குறைந்த அளவிலான கடன் உச்ச வரம்பை நிர்ணயித்தது.

ஆண்களை ஒப்பிடும்போது பெண்கள் சிறந்த நிதநிர்வாக வரலாறையும் வருமானம் மற்றும் இதர பிற சொத்துக்களையும் கொண்டிருந்த போதிலும், பெண்களுக்கு குறைவான கடன் வரம்புகளையே அந்த ஏ ஐ, நிர்ணயித்தது.

ஆப்பிளின் இணை நிறுவனர் ஸ்டீவ் வோஸ்னியாக், "என் மனைவி நல்ல நிதி நிலைமையையும், கடன் மதிப்பெண்ணையும் (கிரெடிட் ஸ்கோர்) பெற்றிருந்த போதும், என்னைவிட அவருக்கு 10 மடங்கு குறைவாக கடன் உச்ச வரம்பு கொடுக்கப்பட்டது" எனத் தெரிவித்தார். இவரைத் தொடர்ந்து பல்வேறு பெண்களும் இது போன்ற புகார்களை தெரிவித்தனர்.

நியூயோர்க் நிதி சேவைத்துறை(லேனுகுளு) இந்த பிரச்சினையை விசாரணை செய்தது. கடன் அட்டையை வடிவமைத்த கோல்ட்மேன் சாக்ஸ், 'கடன் வரம்புகளை நிர்ணயிக்கும் வழிமுறையில் வேண்டுமென்றே எந்த ஒரு பாலின சார்பும் உள்ளீடாக தரப்படவில்லை' எனக் கூறியது. இருப்பினும் கடந்த காலத் தரவுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளையே இது பிரதிபலிக்கிறது எனக் கூறியது. இந்தக் குறைபாடு இன்றளவும் சரி செய்யப்படவில்லை. மாறாக வங்கிகள் இவற்றை ஆராய்ந்து சரியான கடன் வரம்புகளை நிர்ணயிக்கின்றன.

துருக்கியம், பின்னிஷ் மற்றும் ஹங்கேரியன் போன்ற சில மொழிகளில் ஆண், பெண், திருநர் மூன்று பாலினத்தையும் குறிப்பதற்கு ஒரே நடுநிலை சொற்களைப் பயன்படுத்துகின்றனர். கூகுள் மொழிபெயர்ப்பு மூலம் இவற்றை ஆங்கிலத்திற்கோ அல்லது பிற மொழியிலோ மொழிபெயர்க்கும் போது, உயர் பதவிகள், வலிமை, துணிச்சல், பணி போன்ற இடங்களில் மொழிபெயர்க்கும போது தானாகவே ஆண் எனக் கொண்டு மொழிபெயர்ப்பு செய்கிறது. வீட்டு வேலைகள், உணர்வு சார்ந்தவை, மற்றும் கீழ்நிலையில் உள்ள பணி போன்ற இடங்களில் பெண் பாலினமாகக் கொண்டு மொழிபெயர்ப்பு செய்கிறது. இது குறித்த புகார்கள் வெளிவந்த பின்னர் சில இடங்களில் இவை சரி செய்யப்பட்டன. ஆனாலும், முழுமையான தீர்வு கிடைக்கவில்லை.



'அலெக்ஸா மற்றும் சிரி(Alexa & Siri)' இவை இரண்டும் மெய்நிகர் உதவி தொழில்நுட்பங்கள் ஆகும். இவை பல துறைகள் சார்ந்த நம் கேள்விகளுக்கு குரல் மூலம் பதில் தரும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் இவற்றில் குரல் தேர்வுகள் பாலினம் சார்ந்து இயங்குகிறது. பெண் குரல்கள் உதவியாளர்கள், அடிபணிதல் தொடர்பான பாத்திரங்கள் மற்றும் செயலகப் பாத்திரங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதே நேரத்தில் ஆண் குரல் கொடுக்கும் யுஜகள் அதிகாரப்பூர்வ அல்லது தொழில்நுட்பப் பாத்திரங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இது போல உணர்ச்சிகரமான கேள்விகளுக்கும் பெண் குரல்களே தேர்வு செய்யப்படுகிறது.

பல குரல் தேர்வுகள் கொண்டு வரப்பட்ட பிறகும் பொதுவாக அவை பாலின பேதத்தோடு தான் இயங்குகின்றன. முழுவதுமாக இது சரி செய்யப்படவில்லை. இதுமட்டுமல்லாமல் பயனாளரின் தனிப்பட்ட உரையாடலைப் பதிவு செய்து அவற்றை முறை இல்லாமல் பயன்படுத்துவதாகவும் புகார்கள் உள்ளன.

'லென்சா' என்ற செயலி செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பயனாளரின் டிஜிட்டல் அவதார்களை உருவாக்கித் தருகிறது. இந்த செயலி நேர்த்தியான வெளியீட்டிற்காக பயனாளரின் முகவடிவியல் தரவுகளை பெற்றுக் கொண்டு, ஆனால் பயனாளரின் அனுமதி இன்றி அந்த தகவல்களை சேமித்துக் கொண்டது. இ'ந்த பயோமெட்ரிக் தரவுகளை பிற்காலங்களில் சட்டத்திற்கு புறம்பாக பயன்படுத்தக்கூடும்' என்ற குற்றச்சாட்டு இதன் மேல் வைக்கப்பட்டது.

இது மட்டுமல்லாமல், இந்த செயலியில் பதிவேற்றம் செய்யப்படும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் படங்களை மட்டும் சம்பந்தமில்லாமலும், சற்று ஆபாசமாகவும் இது சித்தரித்தது. மேலும் மேற்கத்திய அழகு என்ற வரையரையில் எல்லா பயனாளர் அவதார்களிலும் மேற்கத்திய மக்களைப் போன்ற முக அமைப்பு, தோல் நிறத்தை வெண்மையாக்குதல் என ஒருதலைப் பட்சமாக இந்த செயலி செயற்பட்டது.

இதற்கு உள்ளீடாக தரப்பட்டவை எல்லாம் இணையதளங்களிலும் சமூக ஊடகங்களிலும் பதிவேற்றம் செய்யப்பட்ட புகைப்படங்கள்தான். தற்போது வரை இந்த செயலி சில கட்டுப்பாடுகளுடன் பயன்பாட்டில் உள்ளது. அமெரிக்காவின் சட்ட அமலாக்க மற்றும் புலனாய்வுத் துறை, குற்றவாளிகளை கண்டறியும் பணியில் ஒரு பகுதியாக இந்த செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உள்ளனர். அதில் அந்த செயலி தவறுதலாக ஒரு கருப்பினத்தைச் சேர்ந்தவரை குற்றவாளியாக அடையாளம் கண்டது. ஆனால் விசாரிக்கும்போது, அவர் எந்தவொரு தவறும் செய்யாதவர் எனத் தெரிய வந்தது. ஆராய்ந்து பார்த்ததில், அந்த செயலி வெள்ளையினத்தைச் சேர்ந்தவர்களின் முகங்களை எளிதில் அடையாளம் காண்கிறது. கருப்பினத்தைச் சேர்ந்தவர்களின் முகங்களை அடையாளம் காண முடியாததால் இது போன்ற பிரச்னைகள் எழுந்தன. இந்த செயலிக்குத் தரப்பட்ட தரவுகள் பெரும்பாலும் வெள்ளை இனத்தவர்களின் தரவுகள்தான். விதைத்ததை தானே அறுவடைச் செய்ய முடியும்?

இதைக் கண்டறிந்த உடன் அமெரிக்க அரசு இந்த தொழில்நுட்பத்தை வடிவமைக்கும் பொறியாளர்களுக்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் பல ஒழுங்கு முறைகளையும் விதிமுறைகளையும் கடைபிடிக்க வேண்டும் என சட்டம் இயற்றியது.

மேற்கூறிய செயலிகளில் உள்ள சில தவறுகள் சரி செய்யப்பட்டுள்ளன. சில தடை செய்யப்பட்டுள்ளன. இருப்பினும் முழுவதுமாக பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை.

சமூகத்தில் பொதுவெளியில் காணப்படும் பாலின சமத்துவமின்மை, இது போன்ற (7ஆம் பக்கம் பார்க்க..)

# நாங்க மாற முடியாது என எதிர்த்த ஹார்வர்ட் பல்கலை நிதியை நிறுத்தி டிரம்ப் 'தடாலடி'





உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்கான 2.2 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பு படி 18,858 கோடி ரூபாய்) மானியங்களை டிரம்ப் நிர்வாகம் அதிரடியாக நிறுத்தி உள்ளது.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பொறுப்பேற்ற முதல்நாளில் இருந்து பல்வேறு முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். அந்த வகையில் உலக புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்கான மானியங்களை நிறுத்தி அதிபர் டிரம்ப் அதிரடி காட்டினார்.

பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்கள் செயல்பாட்டை கட்டுப்படுத்தும் வகையில், டிரம்ப் ஹார்வர்ட் பல்க லைக்கழகத்திற்கு கடிதம் எழுதி இருந்தார். அந்த கடிதத்தில், "பல்கலைக் கழகத்தில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். மாணவர்கள் அட்மிஷன் தகுதி அடிப்படையில் மட்டுமே நடக்க வேண்டும்.

பணியமர்த்தல் கொள்கைகளில் மாற்றம், பல்கலைக்கழகத்தின் பன்முகத்தன்மை கொள்கையில் ஆய்வு எனப் பல மாற்றங்களை செய்ய வேண்டும். பாலஸ்தீன ஆதரவு போராட்டங்களைத் தடுக்கும் வகையில் மாஸ்க் அணியத் தடை விதிக்க வேண்டும்.

குற்றச் செயல்கள், வன்முறை அல்லது துன்புறுத்தல்களை ஆதரிக்கும் அல்லது ஊக்குவிக்கும் எந்தவொரு மாணவர் குழு அல்லது கிளப்பை அங்கீகரிக்க அல்லது நிதி அளிக்கக்கூடாது." என டிரம்ப் நிர்வாகம் வலியுறுத்தி இருந்தது. இதனை ஹார்வர்ட் பல்கலை நிர்வாகம் ஏற்க மறுத்துவிட்டது. இது குறித்து ஹார்வர்ட் பல்கலை தலைவர் ஆலன் கார்பர் டிரம்பிற்கு பதில் கடிதம் எழுதினார்.

அந்த கடிதத்தில், "பேச்சு சுதந்திர உரிமைகளை மீறுவதாகவும், இனம், நிறம் அல்லது தேசிய வம்சாவளியின் அடிப்படையில் பாகுபாடு காட்டுவது போல இருக்கிறது. யாரைச் சேர்க்கலாம். எந்தெந்த படிப்பு மற்றும் துறைகளைத் தொடரலாம் என்பதை எந்த அரசும் சொல்லக்கூடாது.

யூத எதிர்ப்புக் கொள்கையைக் கையாள பல்கலைக்கழகம் தேவையான சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது" என்று ஆலன் கார்பர் தெரிவித்து இருந்தார். இதனால் ஹார்வர்ட் பல்கலைக்கான 2.2 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பு படி 18,858 கோடி ரூபாய்) மானியங்களையும், 60 மில்லியன் டாலர் (இந்திய மதிப்பு படி 514 கோடி ரூபாய்) ஒப்பந்தங்களையும் டிரம்ப் நிர்வாகம் அதிரடியாக நிறுத்தி உள்ளது.

இது குறித்து அமெரிக்க நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சிவில் உரிமைகள் சட்டங்களை நிலைநிறுத்தும் பொறுப்பைக் கடைப்பிடிக்காத பல்கலைக்கழகங்களுக்கு அரசு நிதி கிடைக்காது.

பல்கலைக்கழகங்களில் கற்றல் சீர்குலைவு நடந்து வருகிறது. யூத மாணவர்கள் மீதான துன்புறுத்தல் அதிகரித்து வருவதை ஏற்க முடியாது" என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

உலகப் புகழ்பெற்ற ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்கான நிதியை நிறுத்தியது அமெரிக்க வட்டாரங்களில் புயலை கிளப்பி உள்ளது (ஐ)




## விண்வெளிக்கு சுற்றுலா சென்று பத்திரமாக பூமிக்கு திரும்பிய 6 பெண்கள்

அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸிற்கு சொந்தமான ப்ளூ ஆர்ஜின் விண்வெளி நிறுவனம் தயாரித்துள்ள நியூ ஷெப்பர்ட்-31 விண்கலத்தில் சுற்றுலா சென்ற ஆறு பெண்கள் இன்று வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினர்.

விண்வெளிக்கு சுற்றுலா பயணிகளை அழைத்துச்செல்வதற்காக அமேசான் நிறுவனர் ஜெப் பெசோஸ் கடந்த சில ஆண்டுக்கு முன் நியூ ஷெப்பர்ட்-31 என்ற விண்கலத்தை ப்ளூ ஆர்ஜின் நிறுவனம் வாயிலாக தயாரித்துள்ளார்

இந்த விண்கலத்தில் பிரபல பாப் பாடகி கேட்டி பெர்ரி உள்பட 6 பெண்கள் மேற்கு டெக்சாஸில் உள்ள ஏவுதளத்திலிருந்து விண்வெளிக்கு சுற்றுலா சென்று விட்டு பத்திரமாக பூமிக்கு திரும்பினர். முன்னதாக புறப்படுவதற்கு 90 நிமிடங்கள் கவுன்ட்டவுன் துவங்கியது. வெற்றிகரமாக விண்ணை நோக்கி இயங்கிய நியூ ஷெப்பர்ட்-31 விண்கலம் விண்வெளி குறிப்பிட்ட பகுதிக்கு சென்று விட்டு பத்திரமாக பூமிக்கு திரும்பியது.

கடந்த 1963ஆம் ஆண்டில் சோவியத் விண்வெளி வீராங்கனையான வாலன்டினா தெரெஷ்கோவ் தனியாக விண்வெளிக்குச் சென்று வந்த பிறகு, பெண்கள் மட்டுமே விண்வெளிப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை. (ஐ)



## இங்கு வந்து நீங்களே பாருங்க் டிரம்ப்புக்கு அழைப்பு விடுத்த ஜெலன்ஸ்கி

எந்தவொரு முடிவை எடுப்பதற்கு முன்போ, பேச்சுவார்த்தைக்கு முன்போ, உக்ரைன் வந்து பாதிக்கப்பட்ட மக்களை சந்திக்குமாறு அமெரிக்க அதிபர் டிரம்ப்புக்கு உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அழைப்பு விடுத்துள்ளார். வடக்கு கிழக்கு உக்ரைன் நகரான சுமி மீது ரஷ்ய நடத்திய அடுத்தடுத்த ஏவுகணை தாக்குதலில் 21 பேர் உயிரிழந்தனர். மேலும், 80க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்தனர். உக்ரைன் - ரஷ்யா நாடுகளுக்கு இடையிலான போர் 3 ஆண்டுகளை கடந்தும் தொடர்ந்து வருகிறது. இரு நாடுகளுக்கு இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால், இரு தரப்பினரிடையே தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. ஐரோப்பிய நாடுகள் உதவியுடன் உக்ரைன் ராணுவமும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது.

வடக்கு உக்ரைன் மீது ரஷ்யா அடுத்தடுத்து ஏவுகணை தாக்குதல் 30க்கும் மேற்பட்டோர் பேர் பலி

அண்மையில் வடக்கு கிழக்கு உக்ரைன் நகரான சுமி மீது ரஷ்யா அடுத்தடுத்த ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இதில், மருத்துவமனைகள், குடியிருப்புகள் என ஏராளமான இடங்கள் சேதமடைந்தன. இதில், 34 பேர் கொல்லப்பட்டனர். ரஷ்யாவின் இந்த தாக்குதல் சம்பவத்திற்கு உலக நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் அமைதி பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கையை ரஷ்யா குறைத்து மதிப்பிடுவதாக பிரான்ஸ் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது. அதேபோல, பலவீனத்தின் வெளிப்பாடுதான் இந்த தாக்குதல் என்று ரஷ்யாவை ஜெர்மனி கண்டித்துள்ளது. இந்த நிலையில், இந்த தாக்குதல் சம்பவம் குறித்து பேசிய உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, 'எந்தவொரு முடிவை எடுப்பதற்கு முன்போ, பேச்சுவார்த்தைக்கு முன்போ, இங்குள்ள மக்களை வந்து பாருங்கள். வீரர்கள், மருத்துவமனைகள், தேவாலயங்கள், குழந்தைகளை சீரழித்து கொன்றுள்ளனர். ரஷ்ய அதிபர் என்ன செய்துள்ளார் என்று நீங்களே பாருங்கள்,' எனக் கூறியுள்ளார். (ஐ)

# இந்திய மாணவர்களை நிராகரிக்கும் ஆஸி.,



ஆஸ்திரேலியாவில் மாணவர் விசாக்களை தவறாக பயன்படுத்துவதாக கூறி, இந்தியாவின் 5 மாநிலங்களை சேர்ந்த மாணவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன.

இந்திய மாணவர்கள் வெளிநாடுகளில் மேற்படிப்புகளை படிக்க அதிகம் விரும்புகின்றனர். அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலியாவில் படிப்பதற்கு ஏராளமான மாணவர்கள் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆஸி., வரும் மாணவர்களுக்கு விசா வழங்குவதில் முறைகேடு நடப்பதாகவும், விசா பெற்று வருவோர், அதை தவறான வழிகளில் பயன்படுத்துவதாகவும் புகார் எழுந்தது. இதனையடுத்து மாணவர் விசா வழங்குவதற்கான நடைமுறைகளை ஆஸ்திரேலிய அரசு கடுமையாக்கி வருகிறது. மாணவர்களுக்கான விசா எண்ணிக்கையை குறைக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அந்த வகையில், குஜராத், பீஹார், உத்தரப்பிரதேசம், பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய 5 மாநில மாணவர்கள் ஆஸி., வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக, தகவல்கள் பரவி வருகின்றன.

டிசம்பர் 2022ம் ஆண்டு முதல் டிசம்பர் 2023ம் ஆண்டு வரை இந்திய மாணவர்களின் விசா விண்ணப்பங்களில் 48 சதவீதம் மட்டுமே ஏற்கப்பட்டன.

தற்போது விசா கோரும் இந்திய மாணவர் விண்ணப்பங்களில் 20 சதவீதம் வரை ஏதாவது காரணம் சொல்லி நிராகரிக்கப் படுகின்றன. இதில், குறிப்பிட்ட மாநில மாணவர்களின் விண்ணப்பங்களை ஏற்பதே இல்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தில் 2022ல் சேர்ந்த பஞ்சாப், ஹரியானா, குஜராத் மாணவர்களில் பெரும்பகுதியினர், படிப்பை பாதியில் நிறுத்திவிட்டதால், அந்த மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களைச் சேர்க்க கூடாது என அந்நாட்டு அரசு 2023ம் ஆண்டிலேயே அறிவுறுத்தல் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருமலையில்...

இடம்பெற்றுள்ளது. வவுனியா, புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய முபாரக் நிப்றாஸ் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் 22 வயதுடைய நண்பனான சயான் என்பவர் விபத்தில் படுகாயமடைந்து திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று யானை மீது மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

## மட்டக்களப்பில்...

மேற்படி மீனவர் நேற்று திங்கட்கிழமை இரவு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ள நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் மீன் பிடித்து விட்டு படகின் ஒரு பகுதியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது மீனவர் கடலில் தவறி வீழ்ந்து காணாமல்போயுள்ளார்.

இதனையடுத்து காணாமல்போன மீனவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், இன்று காலை மீனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விவாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## வீதியோரத்தில்...

65 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கடந்த 11ஆம் திகதி தனது வீட்டுக்கு அருகில் சைக்கிளை நிறுத்தி வைத்து வீதியோரமாக நின்று தனது நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார்.

இதன்போது வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவர் மீது மோதியது.

விபத்தில் மேற்படி நபரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் 65 வயதுடைய நபர் சிகிச்சை பலனின்றி நேற்று (14) திங்கட்கிழமை உயிரிழந்தார்.

## பிள்ளையானுக்கு...

சிவநேசத்துரை சந்திரகாந்தனுடன் தொலை பேசி மூலம் உரையாட அனுமதிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 9 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும், குறித்த கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை எனவும், தடுப்புக் காவலில் உள்ள சந்தேகநபருடன் தொலைபேசியில் உரையாடுவது சட்டவிரோதமானது எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அத்துடன் முன்னாள் அமைச்சர் உதய கம்மனபிலவுக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனை நேரில் சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

சிவநேசத்துரை சந்திரகாந்தனின் சட்டத்தரணியாக உதய கம்மன்பில செயற்பட்டதால் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது என்றும் அமைச்சர் கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 18 ஆண்டுகளின் பின்னர், கடந்த 8 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சிவநேசத்துரை சந்திரகாந்தன் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## பொதுமக்கள்...

மற்றும் அவரது மனைவி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் சாரதியான டொன் அஜித் பிரியந்த மற்றும் அவரது மனைவி ஆகியோர் தமது இரண்டு குழந்தைகளுடன் வாகனத்தில் அனுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாரதிக்கு ஏற்பட்ட தூக்கமே விபத்துக்கான காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் சாரதி மற்றும் அவரது மனைவியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன்,படுகாயமடைந்த இரண்டு குழந்தைகளும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மகன் பலத்த காயங்களுடன் தற்போது பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், மகள் அம்பன்போல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வாகன விபத்தில் 6 வயது சிறுமி பலி

## அறுவர் காயம்

கொழும்பு, ஏப். 15

எல்பிட்டிய - அம்பலாங்கொடை வீதியில் இடம்பெற்ற கோர விபத்தில் 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த விபத்தில் 6 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோ ஒன்றும் வான் ஒன்றும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நீதிமன்றம்....

அந்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிமன்றம் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுக்களை மீள ஏற்றுக்கொள்ளுமாறு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையிலேயே வேட்புமனுக்கள் தொடர்பில் நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், மனுக்கள் மற்றும் வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகளைக் குறித்த மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்திற்கு வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் குறித்து வெளியான அறிவிப்பு

கொழும்பு, ஏப். 15

கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் (G.C.E A/L Exam) பெறுபேறுகள் ஏப்ரல் மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த விடயத்தினை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் (Commissioner General of Examinations) அமித் ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை கடந்த ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை நடைபெற்றது.

இந்த நிலையில் நாடளாவிய ரீதியில் 3,33,185 பரீட்சார்த்திகள் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

இவர்களில் 2,53,390 பாடசாலை பரீட்சார்த்திகளும் 79,795 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குவர்.

நாடு முழுவதும் 2,312 பரீட்சை மையங்களிலும் 319 ஒருங்கிணைப்பு மையங்களிலும் இந்த பரீட்சை நடைபெற்றது.

இதேவேளை உயர்தரப் பரீட்சையின் மேற்பார்வை பணிகளில் 25,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரணிலுக்கெதிரான சி.ஐ.டி முறைபாடு! கேள்வி எழுப்பும் தென்னிலங்கை கட்சிகள்



கொழும்பு, ஏப் 15

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஏன் கைது செய்யப்படவில்லை என்று முன்னிலை சோசலிசக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

பட்டலந்த சித்திரவதை மையத்தில் ரணில் விக்ரமசிங்கவின் சித்திரவதைகளில் ஈடுபட்டதை தான் நேரில் கண்டதாக தனது கட்சியின் மத்திய குழு உறுப்பினர் இந்திரானந்த டி சில்வா குற்றப் புலனாய்வுத் துறையிடம் முறைபாடு அளித்துள்ளதாக கட்சியின் பிரசாரச் செயலாளர் துமிந்த நாகமுவ கூறியுள்ளார்.

முன்னதாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒரு இளைஞர் ஸ்டிக்கர் ஒட்டியதற்காக கைது இந்நிலையில், முறைபாடு கிடைத்துள்ள நிலையில், ரணிலை ஏன் கைது செய்ய முடியாது என்று துமிந்த நாகமுவ கேள்வி எழுப் பியுள்ளார். (ஐ)

# புதிய தொழில்நுட்பம்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பத்திலும் தொடர்வது முறையாகாது.

எந்தவொரு துறையிலும் பெண்களின் பங்களிப்பும், பெண்களின் கருத்துக்கள் மற்றும் அவர்களின் படைப்புகள் முறையாக பதிவு செய்யப்பட வேண்டும் என்பதையே இவை எடுத்துக் காட்டுகின்றன. அவ்வாறு இல்லாத போது, கண்டுபிடிப்புகளின் முடிவுகள் ஒருதலைப்பட்சமாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் உண்டு.

எந்த ஒரு கண்டுபிடிப்பும் ஒரு நாட்டையோ அல்லது நாட்டு மக்களையோ தவறாக வழிநடத்துவதற்கும் சித்தரிப்பதற்கும் உருவாக்கப்பட்டது அல்ல. சுருக்கமாக சொல்லப்போனால், ‘சிட்டி ரோபோவை’ போலத்தான் இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம். தொழில்நுட்பத்தால் எந்தவொரு பிரச்னையும் இல்லை. இதற்குத் தரப்படும் தரவுகளையும் கட்டுப்பாடுகளையும் பொறுத்தே இதன் பயன்பாடும் விளைவுகளும் இருக்கும். சரியான தரவுகளோடு இதனை வடிவமைக்கும் போது, இதனால் ஏற்படும் நன்மைகளும் பயன்களும் ஏராளம். அதில் சந்தேகமே இல்லை. ஏஐ தொழில்நுட்பத்தில் உள்ள குறைபாடுகளை களைவதற்காக அமெரிக்காவைத் தொடர்ந்து இங் கிலாந்து, ஜப்பான், கனடா, ஐரோப்பிய நாடுகள், இந்த தொழில்நுட்பத்தில் உருவாக்கப்படும் திட்டங்களுக்கென தனி கட்டுப்பாடுகளையும் ஒழுங்குமுறைகளையும் கொண்டு வந்துள்ளன.

மென்பொருள் மற்றும் செயலிகள் மட்டுமல்லாது இன்று பலரும் பரவலாக பயன்படுத்தி வரும் சேட் ஜிபிடி, மெட்டா செயலி போன்ற உரையாடல்கள் மூலம் அனைத்து விதமான கேள்விகளுக்கும் பதில் தரக்கூடிய சேட் பாட்களுக்கு பல ஒழுங்கு முறைகளும் நன்னெறிகளும் கற்பிக்கப்படுகின்றன.

வெறுப்புப் பேச்சுகளை எதிர்கொள்ளும் முறை.

பாலியல் தொடர்பான கேள்விகளை கையாளும் விதம்.

பயனாளரின் எண்ண ஓட்டத்தை புரிந்து கொண்டு அதற்கேற்ப அவர்களுக்கு உதவுவது.

அரசியல்,மதம் சார்ந்த பதில்களை கூறும் போது ஒரு தலை பட்சமாக இல்லாமல் பொதுவாக பதிலளித்தல்.

பதில் கூற இயலாத சில உணர்ச்சிகரமான கேள்விகளுக்கு நேரடியான பதிலை தவிர்த்தல்.

கேள்வியை சார்ந்த சில தகவல்களையோ அல்லது எச்சரிக்கையையோ தருதல்.

‘மொத்தத்தில் பயனாளரை அனாவசிய கேள்வி கேட்டு விடக்கூடாது. அதே சமயத்தில் அவர்களின் கேள்விக்கு அதிகமாக பதில் கூறி செயற்கையாகவும் இருந்துவிடக் கூடாது’ என்பது போன்ற பல ஒழுங்கு முறைகள் அதற்கு கற்பிக்கப்படுகின்றன.

இதுபோன்ற நெறிமுறைகளை புகுத்தி, சரியான தரவுகளை தருவது இந்த பிரச்னைக்கு தற்காலிக தீர்வு தானே? உண்மையில் பாலின சமத்துவம் பற்றிய மனித சிந்தனையில் தானே மாற்றம் தேவை?

இன்று கல்லூரிகளில் அரசு உத்தரவின்படி மாணவர்களிடம் உள்ள சில சிக்கலான பிரச்சினைகளை சரிசெய்ய பல்வேறு அமைப்புகள் செயல்படுகின்றன. அந்த அமைப்புகளின் மூலம் போதை பொருள்களால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு, இணைய வழி மிரட்டல் இவற்றைக் கண்டறிந்து, அதிலிருந்து தற்காத்துக் கொள்ள வழிகாட்டுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆனால் இளைய தலைமுறையை நல்வழிப்படுத்த இதோடு நின்று விடாமல், இந்த பிரச்னைகள் ஆரம்ப காலத்திலேயே தடுக்கப்பட வேண்டும். இளைய சமூகத்திற்கு சரியானது, தவறானவற்றைப் பகுத்தறிய கற்றுத்தர வேண்டும்,வழிகாட்ட வேண்டும்.

ஆரம்பம் முதலே குழந்தைகளுக்கும்,இளைய தலைமுறைக்கும் நல்லொழுக்கம் மற்றும் நல்ல சிந்தனைகளை கொண்டு சேர்ப்பதோடு மட்டுமல்லாமல், பாலின சமத்துவம் பற்றியும் இல்லங்களில் இருந்தே கற்பிக்க வேண்டும்.வேர்களை பலப்படுத்துவதுதான் மிக முக்கியமான ஒன்று.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி என்பது இக்காலத்தில் இன்றியமையாத ஒன்றாகும். அதை மறுப்பதற்கில்லை. ஆனால், அதேசமயம் சமூகத்தின் முன்னேற்றம் என்பது நல்ல சிந்தனைகளால்தான் ஏற்படும். அப்படிப்பட்ட நல்ல சிந்தனைகளையும் நெறிகளையும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது.







Green Media House Pvt Ltd.